# ஜோதி மணி மாலை




சிவ செல்வராஜ்

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

கன்னியாகுமரி

# காணிக்கை

## திரு அருட்பா தந்த

திருவருட் பிரகாச வள்ளலார்

இராமலிங்க சுவாமிகள்

பொற்பாதங்களில்

பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்




| | | |
|---|---|---|
| தோற்றம் | : | 05-10-1823 |
| சன்மார்க்க சங்கம் | : | 1865 |
| சத்திய தருமச்சாலை | : | 1867 |
| சித்தி வளாகம் | : | 1870 |
| சத்திய ஞான சபை | : | 1872 |
| ஒளியாகி எங்கும் நிறைந்தது | : | 30-01-1874 |

# ஜோதிமணி மாலை



## சிவ செல்வராஜ்

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
17/49F, கருணை இல்லம்
கலைஞர் குடியிருப்பு
கன்னியாகுமரி - 629 702
Cell : 92451 53454

## பதிப்பு விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | : | ஜோதிமணி மாலை |
| ஆசிரியர் | : | சிவ செல்வராஜ் |
| பொருள் | : | ஆன்மீகம் |
| உரிமை | : | S.S. சுயம்ஜோதி |
| வெளியிடுவோர் | : | சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்<br>17/49F, கருணை இல்லம், கலைஞர் குடியிருப்பு<br>கன்னியாகுமரி - 629 702 |
| முதல் பதிப்பு | : | 24-07-2006 - ஆடி அமாவாசை<br>1000 பிரதிகள் |
| காணிக்கை | : | ரூ. 20 |
| கிடைக்குமிடம் | : | ஜெயகுமாரி ஸ்டோர்ஸ்<br>கோர்ட் ரோடு, நாகர்கோவில் - 629 001<br>Ph : 04652 - 221307<br><br>R. சிவலிங்கம்<br>சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்<br>K.M.A. கார்டன், சின்னாண்டிமடம்,<br>கொடுங்கையூர், சென்னை - 600 118<br>Cell - 94443 62227<br><br>N. கோபால் சாமிராவ்<br>சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்<br>C-3, பஞ்சாப்ரோடு, பிளாக் - 4,<br>நெய்வேலி - 607 801. Cell : 94438 76394 |
| அச்சிட்டோர் | : | நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்,<br>கோர்ட் ரோடு, நாகர்கோவில். Ph : 233853 |



**ஆசிரியரின் பிற ஞான நூல்கள்**

| | | | |
|---|---|---|---|
| கண்மணி மாலை | ரூ. 50 | அஷ்டமணி மாலை | ரூ. 50 |
| அருள்மணி மாலை | ரூ. 50 | செல்வமே சீர் தாருமே | ரூ. 10 |
| ஸ்ரீபகவதி அந்தாதி | ரூ. 10 | செந்திலாண்டவன் பாமாலை | ரூ. 10 |
| அருட்பெருஞ்ஜோதி அந்தாதி | ரூ. 10 | அன்பு உதய மலர் | ரூ. 10 |
| சன்மார்க்க தெய்வம் | ரூ. 10 | வள்ளலார் விழியே | ரூ. 20 |
| சற்குரு கோவிந்த சுவாமிகள் | ரூ. 10 | ஜோதி ஐக்கூ அந்தாதி | ரூ. 50 |

**வாங்கி! படித்து! உணர்ந்து? வாழ்வாங்கு வாழ்க!**

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

# சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

17/49F, கருணை இல்லம், கலைஞர் குடியிருப்பு,
கன்னியாகுமரி - 629 702

## பணிவுரை

ஆன்மநேய ஒருமைப்பாடுடையீர்,

வந்தனம். நன்றி. நலமே நிலவுக. எல்லாம் வல்லவரான, எங்கும் நிறைந்த இறைவன் திருவருளால், சற்குரு திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்கள் ஆசியால், அடியேனை ஆன்மீக பாதையில் நடைபயில வைத்த கருணையின் திருஉருவம் ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள் தூண்டுதலால், அடியேன் 21-03-1992 இல் முதன்முதலாக கண்மணி மாலை என்னும் ஞானவிளக்கம் கூறும் நூலை ஞானிகள் ஆசியுடன் வெளியிட்டேன்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என் உள்ளிருந்து தூண்ட பற்பல கவிநூற்கள் ஆக்கினேன். இறைவனை சுட்டும் இனியபாக்களே என் கை எழுதியது! ஆன்மீக வழி காட்டும் அறிவுப் பாடல்களே! எனது பிரார்த்தனையும் கூடவே இணைந்தது.

இரண்டாவதாக 21-12-1995 அனுமன் ஜெயந்தியன்று தேரூர் குருமகாதேவ் இராமதாச பரமஹம்ஸர் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய விநாயகர் அனுமன் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக மதுரை அன்பர் திரு. A. மகாலிங்கம் அவர்கள் வெளியிட்டார்கள்.

மூன்றாவதாக 23-01-1996 தோட்டியோடு ஸ்ரீ மௌன குரு சுவாமிகள் குருபூஜையன்று, குருவருளால் அடியேன் எழுதிய ஸ்ரீ மௌனகுரு சுவாமிகள் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக இரணியல் அன்பர் திரு. K. திருநீலகண்டன் அவர்கள் வெளியிட்டார்கள்.

நான்காவதாக 28-07-1996 பிரதோஷத்தன்று மருந்துவாழ்மலை ஓம் உன் திருவருளடி ஆனந்த காளிதாசன் சுவாமிகள் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ சுந்தரேஸ்வரர் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக ஆரல்வாய்மொழி ஜோதி குரு ஞானசபை அன்பர் சிவத்திரு இராமசாமி நாடார் அவர்கள் வெளியிட்டார்கள்.

ஐந்தாவதாக 16-09-1996 விநாயகர் சதுர்த்தியன்று ஸ்ரீ அறுகம்புல் சித்தர் நடராஜ சுவாமிகள் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ அறுகம்புல் சித்தி பாலவிநாயகர் துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக கோணம் ஸ்ரீ அறுகம்புல் சித்தர்தபோவன டிரஸ்ட்டார் வெளியிட்டார்கள்.

ஆறாவதாக 13-10-1996 நவராத்திரி முதல் நாளில் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்களின் 174-ஆவது திருஅவதார தின நன்னாளில் என் குரு ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ ஆயுர்தேவி துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக வேம்பனூர் அன்பர் திரு. P.K. மாதவன் நாயர் அவர்கள் நினைவாக அவர்தம் மனைவி திருமதி. M. ஹைமாவதி தங்கச்சி அவர்கள் வெளியிட்டார்கள்.

ஏழாவதாக, 14-01-1997 பொங்கல் நாளில் அடியேன் எழுதிய தேரூர் குருமகாதேவ் இராமதாச பரமஹம்சர் போற்றி பாடல்கள், ஸ்ரீ அழகிய மணவாள விநாயகர் துதிகள் ஆக 108-ஐ இலவசப் புத்தகமாக பள்ளத்தூர் வாழும் உத்தம தம்பதிகள் திரு. S. தங்கமணி நாடார் திருமதி. S. தங்கப்பழம் நாடாச்சி ஆகியோர் வெளியிட்டார்கள்.

எட்டாவதாக 07-03-1997 மகா சிவராத்திரி திருநாளில் அடியேன் எழுதிய திருப்பன்னிபாகம் அருள்தரும் ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமி துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக, எனது தந்தை ஜெயகுமாரி ஸ்டோர்ஸ் உரிமையாளர் திரு. K. சிவசுப்பிரணியபிள்ளை அவர்களின் 80 வயது நிறைவைக் கொண்டாடும் விதமாக எனது மகன் S.S. சுயம்ஜோதி Pre. K.G. அவர்கள் வெளியிட்டார்கள்.

ஒன்பதாவதாக பேயோடு, அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக திருநாளில் 15-06-1997-ல் பேரருள் புரியும் பேயோடு ஸ்ரீ குருதவசி ஐயா பாமாலை 108-ஐ இலவச புத்தகமாக ஸ்ரீ குருதவசி ஐயா குடும்பத்தாராகிய பேயோடு ஊர் பொதுமக்கள் வெளியிட்டார்கள்.

பத்தாவது நூலாக, அடியேன் முதலில் வெளியிட்ட கண்மணிமாலை பல புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டு 10-09-2002 விநாயகர் சதுர்த்தியன்று கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பதினொன்றாவது நூலாக, சற்குரு வள்ளலார் தூண்டுதலால் அடியேன் அருள்மணி மாலை என்னும் ஞானவிளக்க நூலை எழுதி 18-02-2004 மஹா சிவராத்திரியன்று கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பன்னிரண்டாவது நூலாக அடியேனை காத்து இரட்சிக்கும் அகில உலக அன்னை, ஆதி சக்தி, கன்னிகா பரமேஸ்வரி, பாலா, வாலை, தாய், கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மனை வேண்டி பிரார்த்தித்து ஸ்ரீ பகவதி அந்தாதியை இயற்றி நாகர்கோவில் கெங்கா ஜுவெல்லர்ஸ் பேருதவியால் 23-06-2004 ஆனி-மகம் மாணிக்கவாசகர் குருபூஜையன்று அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி, மகாமாயை கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பதின்மூன்றாவது நூலாக, எல்லாம் வல்ல இறைவன் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் திறத்தைக்கூறி, அருள்புரியும் விதத்தை வெளிப்படுத்தி, அடியேன் உள்ளிருந்து சற்குரு வெளிப்படுத்தி அருளிய, ஒப்பற்ற அருட்பெருஞ்ஜோதி அந்தாதி என்னும் நூலை 25-01-2005 தைப்பூசத்தன்று திருவண்ணாமலை ஆகாஷ் ஹோட்டல்ஸ் உயர்திரு. S.R. முத்து கிருஷ்ணன் பேருதவியால் வடலூரில் தர்ம சாலையில் வெளியிடப்பட்டது.

பதினான்காவதாக சன்மார்க்க தெய்வம் எனும் நூலை நாகர்கோவில் ஜெயகுமாரி புத்தக நிலைய உரிமையாளர் S. அசோக்குமார், பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா 80-வது பிறந்த நாளான 23-11-2005-ல் வெளியிடுகிற புண்ணியம் பெற்றார்.

பதினைந்தாவது நூலாக "சற்குரு கோவிந்த சுவாமிகள்" 30-12-2005 ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தி திருநாளில் ஆரல்வாய்மொழி இராமலிங்க சுவாமி நிலைய அன்பர் ஜோதி ஸ்ரீ N. கனக சபாபதி அவர்களால் வெளியிடப்பட்டது.

பதினாறாவது நூலாக அடியேன் ஏற்கனவே இலவசமாக வெளியிட்ட எட்டு நூற்களைத் தொகுத்து "அஷ்டமணி மாலை" என்று 06-04-2006-ல் அடியேனின்

50-வது பிறந்தநாளில் நட்சத்திரத்தில், 1992-ம் வருட முதலே எம்மை ஆதரித்துக் காத்தருளும் என் உயிர் சென்னை அன்பர்கள் ஜோதி ஸ்ரீ த. முருகேசன், ஜோதி ஸ்ரீ G. நாராயணா ஜோதி ஸ்ரீ G. கோபாலகிருஷ்ணன் ஆகிய மும்மூர்த்திகளும் வெளியிட்டார்கள்.

பதினேழாவது நூலாகவும், அடியேனின் பொன்விழா ஆண்டு வெளியீடாகவும், ஆன்மீக வெள்ளிவிழா ஆண்டுவிழா வெளியீடாகவும் "செல்வமே சீர் தாருமே" நூல் அடியேனின் 14 வருட திருமண நிறைவு நாளில் 08-04-2006-ல் எம் உயிரோடு கலந்துவிட்ட ஜோதி ஸ்ரீ R. சிவலிங்கம் சென்னை அவர்கள் வெளியிட்டார்.

பதினெட்டாவது நூலாக "செந்திலாண்டவன் பாமாலை" 11-4-2006 பங்குனி உத்திர நாளில் என் வணக்கத்திற்குரிய பெரியவர் R. துரைசாமி அவர்களும் அன்பின் இனிய நண்பர் S.B. சுப்பையா அவர்களும் வெளியிட்டார்கள். நன்றி நன்றி.

பத்தொன்பதாவது நூலாக "அன்பு உதய மலர்" 14-4-2006 தமிழ் புத்தாண்டு ஸ்ரீவிய வருஷ வெளியீடாக சென்னை சன்மார்க்க சங்க ஜோதி ஸ்ரீ இராஜப்பா வெளியிட்டு புண்ணியத்தை தேடிக் கொண்டார்கள்.

இருபதாவது நூலாக வள்ளலார் விழியே 14-04-2006 தமிழ் புத்தாண்டு ஸ்ரீவிய வருஷ வெளியீடாக, ஆசிரியரின் 50 வயது பொன் விழா வெளியீடாக, சென்னை சன்மார்க்க சங்க ஜோதி ஸ்ரீ கணேஷ் அவர்கள் வெளியிடும் புண்ணியம் பெற்றார்கள். அவர்கள் இறைவன் அருளால் சகல நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழ பிரார்த்திக்கின்றேன்.

இருபத்தோராவது நூலாக இந்த ஜோதிமணி மாலை 24-07-06 ஆடி அமாவாசையன்று நெய்வேலி சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க ஜோதி ஸ்ரீ நிர்மலா தேவி அவர்கள், மகன் ஜோதி ஸ்ரீ நகுலன், அவர்கள் மருமகள் ஜோதி ஸ்ரீ Dr. இரா. அருள்மொழி ஆகியோரது பரிபூரண அன்பால், உதவியால் வெளிவருகிறது.

எம் வாழ்க்கை மேம்பட உதவிடும் தூய ஆத்மாக்கள் எல்லோருக்கும் என்றென்றும் எமது இதயங்கனிந்த நன்றி பல.

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் சென்னை அணுக்கத் தொண்டர் R. சிவலிங்கம், சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் நெய்வேலி அணுக்கத் தொண்டர்கள் N. கோபால்சாமி ராவ், நிர்மலா தேவி ஆகியோருக்கும் அடியேன் என்றும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். நன்றி.

அடியேனை காத்து அருளும் நண்பர்கள் T. முருகேசன், G. நாராயணா, G. கோபாலகிருஷ்ணன், ஆரல்வாய்மொழி N. கனக சபாபதி, நாகர்கோவில் S. கிருஷ்ணபிள்ளை, சி. சுப்பிரமணியம், எட்வர்ட், M. கோபால ஆசான் மகன் ராஜா, ஆசான் சேகர் ஆகிய அனைவருக்கும் எமது இதயங்கனிந்த நன்றி. நன்றி.

எல்லோரும் எல்லா நலனும் பெற்று நலமுடன், சிறப்புடன், வளமுடன் வாழ்வாங்கு வாழ வேண்டி இறைவனை வணங்குகின்றேன்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

என்றும் உண்மையுள்ள,

**சிவ. செல்வராஜ்,**

கன்னியாகுமரி.




ஓம் கண்திருஷ்டி பில்லி சூனியம் தீர்ப்பவரே போற்றி ஓம்

# ஜோதிமணி மாலை

## குரு வணக்கம்

குருவையா எங்கள் குற்றம் நீக்கையா
திருவையா நீர்தான் திகழும் ஜோதியையா
உருவையா கொண்டு உலவும் தெய்வமையா
வருமையா எந்தனை வாழவிடு நெறியாயையா

## நூல்

புவிமீது துன்பமே போதுமையா புனிதனே இன்னருள் தருவாயே
கவிமீது காதலால் தொடுத்தேனே கண்மலரே கவினுறு காட்சியே
உமிமீது நெருப்பாய் வேகிறேன் உபதேசம் அருளிட தாமதமேன்
துமிமீது துரும்பே அடியேன் துலக்கம் தந்தெமை காப்பாயே

உள்ளத் துள்ளானை உணர்த்திட வேண்டுமே
தெள்ளத் தெளிந்தால் தெரியும் ஜோதியே
கள்ளப் புலன்களை கண்டிக்க வேண்டுமே
மெள்ளப் புலனாகும் மென்மலர் பாதமே

பண்ணிய பாவங்கள் பதறினால் மாறிடுமோ
எண்ணிய தீமைகள் எண்ணில் அடங்காதே
நண்ணிய மாந்தர் நலமடைய அருளுமே
கண்ணிய மாகவே கண்ணில் நில்லுமே

இறைவனை பற்றியே பாடுக இறப்பவனை பாடாதே என்றனர்
இறைவனை பற்றியே நிற்கும் இருப்பவனை பாடுதல் தவறாமோ
இறைவனை பற்றியே உணர்ந்தால் இறப்பினை வெல்வான் மனிதன்
இறைவனை பற்றியே எல்லாம் இருக்கையில் எல்லாம் இறைவனே

தாங்காது வேதனை தாளமுடியாது சோதியாதே
வாங்காது உயிரை விடமாட்டாயோ வள்ளலே
தூங்காது மனமே தூதுவளைக்குள் போவாயோ
தூங்காது தூங்கும் தூயநெறிதா தூயவனே

வாடுகின்ற ஏழையேனை வாட்டம் போக்கியே
பாடுகின்ற பணிசிறக்க பார்போற்ற செய்வாயே
நாடுகின்ற மாந்தரை நாலிலொன்று பற்றியே
ஆடுகின்ற சேவடிக்கே ஆளாக்க அருள்வாயே

ஆடுதுறை அண்ணலே ஆதரிக்க அருள்தருகவே
ஆடுதுறை அறிவிக்க ஆதாரம் அகத்தியனே
ஆடுதுறை அன்பால் ஆண்டிட அறநெறியே
ஆடுதுறை அறிவாம் ஆனந்தம் அடைந்த பின்னே

ஆடுதுறை அறிந்தால் ஆபத்து இல்லையே
ஆடுதுறை அண்ணல் ஆனந்த நடராசனே
ஆடுதுறை சேவடிகள் ஆதித்யன் சோமனே
ஆடுதுறை குருமகானே ஆதரிக்க வேண்டுவனே

வந்தேன் சந்நிதிக்கே வரந்தந்து காப்பாயே
தந்தேன் என்னையே திருவடியில் சரணானேன்
உந்தேம துரசொல்லை உடனேயே கேட்கயருளே
எந்தேகம் என்னாவி எல்லாமே நீதானே

உள்ளத் துள்ளானை உற்று உணரவே
கள்ள வாதனையை கண்ணால் மாற்றுமே
அள்ளக் குறையாத அருளினை பெறலாமே
தெள்ளத் தெளிவாக தெரிவித்தார் சித்தரே

அறிவொளியாகி அகத்தின்நின்று அடுத்தடுத்து அறிவிக்கிறாயே
அறிவாய் நீ என அபிராமிபட்டரும் அகமகிழ்ந்து ஆதரித்தாரே
அறிவுறுத்தி அனைவருக்கும் அன்புநெறி அளித்திடவே
அறிவேபூரணமாய் ஆனந்தமாய் அவனிமீதில் அழியாதிருக்கலாமே

பட்டரேதானே வந்துகாட்சி பாவியேனுக்கு தந்ததேனோ
பத்தரைமாற்று பொற்கோயில் பார்த்தறிய அருள்தாருமே
இத்தரைமீதிலே எந்நாளும் இன்புற்றிருக்க வழிகாட்டிடு
அட்டமிரண்டு அறிந்துகொள்ள அவனியிலே ஆசிதருக

திருப்பதி சாரமாம் இல்லையில்லை திருப்பதி இதுவே உண்மை
திருவாழி மார்பனை தொழுதால் திருவடி பேற்றினை அடையலாமே

திருமால் திருமகள் இருவரும் திருவருள் தந்தே காப்பார்களே
திருப்பாற் கடலுறை வேந்தே திருஷ்டி எமக்கு அருள்வாயே

நம்மாழ்வார் உதித்த நல்திருப் பதிசாரமே
நம்மஆழ்வார் இவரென நயந்து வந்தேனே
நம்பிக்கை தொழுதார் நலமெலாம் பெறுவரே
நம்பிரான் திருவாழும் நல்மார்பனே சரணமே

மருங்கூர் முருகனுக்கு மயிலாடியிலே ஆராட்டு
வருங்கூர் வடிவேலனை வணங்கியே வாழ்ந்திடு
தருங்கூர் புத்தியால் தண்டபாணியை உணர்ந்திடு
இருங்கூர் முனையுள்ள இணையடி பற்றிடு

குருதவசி ஐயாவே கும்பிட்டு மகிழ்ந்தேனே
உருவதான சன்னிதியை உன்னருளால் கண்டேனே
திருமுன் வந்திட திரிலோகா அருள்வாயே
வருவதான பேரின்பம் வந்துநான் வாழ்ந்திடவே

பேயோட்டி பெருமை பேரின்பம் கொண்டவரே
நாயோட்டு மந்திரம் நானறியச் செய்திடுமே
தாயோடும் சேயோடும் தாரமோடும் வாழச்செய்யே
மாயையோட மகனுக்கு மரணமிலாது காப்பாயே

அஞ்சனம் எழுதிய கண்டனே அழகிய சாஸ்தா தெய்வமே
வஞ்சிமனம் நோகாது சிறப்பாக வாழவே அருள் தருவாயே
நெஞ்சினில் வன்மம் தோன்றாது நெறியாக இருந்திட செய்வாயே
தஞ்சமென வந்தேனே சக்தியை தந்தருள் காத்தருள் எந்நாளுமே

குட்டிக் கண்ணா குவலயம் காப்பவனே
தட்டிக் கழிக்காதே தந்திடு மேன்மையை
சுட்டிக் காட்டிடு சுடர்விழி ஆனவனே
மட்டிப் பழந்தா மதுசூதனா துவாரகையானே

சாஸ்தா அருளை தந்தாலே சாவை வெல்லலாம் இனியே
ஆஸ்தா னத்திலே இருத்தி அறிவு பெருகிட செய்யே
வாஸ்த வமான உன்னை வந்தனை புரியவே அருளே
சாஸ்வத மாகவே இருந்திட சடுதியில் வருவாயே காப்பாயே

யாரையும் கொன்றதற்கு விழாஎடுக்க வேண்டாம்
பாரையும் காப்பதற்கு பண்புரைக்க வருவீரே
தேரையும் கல்லுக்குள் வாழ்வதற்கு காரணமான
நாரையும் மோட்சங்காண வைத்தவனை அறிவோமா

வாயில்லா பிராணிகளை வதைத்துதின்ன ஒருதிருநாளா
தாயில்லா பிள்ளைகளை தத்தெடுக்க பலரிருக்கையில்
காயில்லா கனிஏது கண்மணியை கருதிப்பாரே
நாயில்லா தலமேது நாயகன்தான் கேட்கிறானே

தீபஒளி ஏற்றிமகிழு திக்கெட்டும் தமிழ்பரப்பு
பாபமினி புரிந்திடாதே பக்குவமாய் வாழ்ந்திடுக
தாபமினி கொண்டிடாதே தற்குறிகளை நம்பியிராதே
லாபமினி வாழ்வுனக்கு வந்தனைசெய் மகிழ்ந்திடு

ஏழைக்கு இரங்குவாய் எல்லோரும் ஓர்குலமே
பாழைக்கும் நீர்ஊற்று பரிதவிக்க விட்டிடாதே
நாளைக்கும் நாமிருப்போம் நம்பிக்கை வைத்திடுவோம்
தாளைத்திரு வடியைநாம் தப்பாமல் சார்ந்திருந்தால்

முப்பந்தல் தேவிதான் முன்னிருந்த தாய்தான்
இப்பந்தம் தந்துதான் இன்பமாக்கி வைத்தாய்
தப்பேதும் புரிந்திடாமல் தடுத்தாண்ட தேவிதான்
எப்போதும் காத்திடுவாள் எங்களை வாழ்த்திடுவாள்

குருவாய் வந்தருளும் குருபகவானே காப்பாயே
திருவடி சரணானேன் திருவருள் புரிவாயே
உருவான துன்பங்கள் உன்பார்வையால் அகலவே
கருவாய் என்நெஞ்சில் கலந்தருள் பிரகஸ்பதியே

சின்னஞ்சிறு உருவாய் சிங்கார ரூபமாயே
வன்னெஞ்சினை மாற்றிட வந்தவளே காளியே
தன்னெஞ்சினை உணரும் திறமதை திருவாயே
பன்னெஞ்சும் நல்லாக்க பக்குவம் அருள்வாயே

பெருமாள் என்னும் பெருமானை பற்றினேனே
திருவாள் மார்பா திருமுகம் காட்டாயோ
இருநாள் பாடுவேனே இடர்தீர் பெருமாளே
வருநாள் துணையாகி வாழ்வாங்கு வாழவையே

குமுறும் கடலருகே குமரி பகவதியே
குமுறும் உள்ளத்தை குளிர வைப்பாளே
அமரும் துன்பமே அன்னை அருளாலே
அமரும் தகுதியினை அன்பருக் கருள்வாளே

கருத்து விநாயகனை கருத்திலே வைத்து
திருத்து மனந்தனை திருவருள் புரிவான்
பருத்த வயிரோனை பரமன் பிள்ளையை
இருத்து இதயத்தில் இன்பம் அருள்வான்

| | | | |
|---|---|---|---|
| வந்தவர்க் | கருளும் | வடசேரி | கணபதியை |
| தந்தமொடு | காட்சி | தந்தருளும் | கருத்துவனை |
| பந்தமென | வணங்கி | பற்றினால் | காப்பானே |
| நந்தம் | வினைனீக்கி | நல்லருள் | தருவானே |
| ஆராட்டு | மடத்திலே | ஆறுமுகன் | வந்தானே |
| பாராட்டு | அவன்புகழை | பார்வதி | மைந்தனை |
| சீராட்டி | அபயம் | சிவமகன் | தருவானே |
| ஏரோட்டி | சிறக்கவே | ஏற்றங்கள் | அருள்வானே |
| பணம் | இருந்தால் | பலம் | வருமே |
| குணம் | இருந்தால் | குலம் | ஓங்குமே |
| பணம் | இல்லையேல் | பழிக்கும் | சுற்றமுமே |
| குணம் | இல்லையேல் | குவலயம் | தூற்றுமே |
| சங்கரன் | மகனே | சங்கர | விநாயகனே |
| ஐங்கரன் | நீதானே | அம்பிகை | பாலகனே |
| தங்கரங் | கொண்டு | தரணியை | காப்பவனே |
| பங்கயம் | கொண்டு | பூஜிப்பேன் | நானே |
| சர்வ | கலைஞானமும் | சர்வ | சுதந்திரமும் |
| சர்வ | சித்தியும் | சர்வ | வல்லமையும் |
| சர்வ | செல்வமும் | சர்வ | முமருள்கவே |
| சர்வ | வியாபியே | சதாசிவ | பிரம்மேந்திரா |
| சாற்றினேன் | தமிழ்மாலை | சகா | திருப்பவனே |
| மாற்றுவாய் | என்னையே | மாயை | அகற்றியே |
| நீற்றுவாய் | வினைகளை | நீயே | கதியென்றேனே |
| ஏற்றுவாய் | மெய்நிலை | ஏகமா | யிருப்பவரே |
| எத்தனை | காலமோ | எந்நிலை | யாவேனோ |
| சித்தனை | பணிந்தேனே | சிவமாக்கி | காப்பாயே |
| அத்தனை | அறிந்தவனே | அடியனுக் | கருள்வாயே |
| தத்தனை | த்துமாற்றி | தவஞானி | ஆக்குவாயே |
| பத்தான | பதத்தை | பற்றிட | அருள்வாயே |
| சத்தான | சித்தே | சதாசிவ | ஆனந்தமே |
| முத்தான | மணியே | முதிர்ந்த | ஒளியே |
| பித்தான | என்னையே | பிறந்திட | வைத்திடாதே |

பெருமாள் புரநடுவே பெருமிதமாக வீற்றிருப்பவளே
தருவாய் நல்வரமே தடுத்தாண்டு கொண்டவளே
அருவாய் உருவாய் அம்மையே வருவாயே
மருள்வார்க் கருளும் மாரியம்மா காப்பாயே

சதாசிவ பிரம்மேந்திரா சச்சிதானந்த மருள்வாயே
சதாசிவ மாகிடவே சன்மார்க்க முணர்ந்திடவே
சதாசிவ மானவனே சற்குருவே காப்பாயே
சதாசிவ சிவஎன்றாலே சாயுச்சியம் கிட்டிடுமே

பிரம்மேந்திரா பரிபூரணா பிறவிப்பிணி நீக்கவா
பிரம்மோற்சவம் யான்காண பிதாவானவா அருள்வாயே
பிரம்மரந்தரம் நின்றொளிர் பிரபையே பேரொளியே
பிரம்மஞ்ஞானம் தந்தருளி பிச்சியெனை காப்பாயே

நெரூருக்கு நான்வந்தே நெகிழ்ந்திட வரமருளே
கரூருக்கு போயிடாது காப்பாற்று கண்ணாளனே
தேரூருக்கு போனதாலே தேவாயுனை அறிந்தேனே
பாரூருக்கு ஊர்சென்றே பக்திஞானம் புகல்வேனே

பண்பட்ட உள்ளத்தை பகவானே தருவாயே
புண்பட்டு துடிப்பதை புனிதாநீ அறிவாயே
கண்பட்டு விட்டதோ கருணைக்கடலே காப்பாயே
மண்போட்டு மூடிடாதே மரணமிலா நிலையருளே

கண்காண வேண்டுமே கண்ணான கடவுளே
விண்காண விழைந்தாலே வினையாவும் ஓடிடுமே
மண்காண அருள்வாயே மகத்துவம் புரியவே
எண்காண எழுத்தாள எங்குருவே காப்பாயே

வாடிடும் மைந்தனெனை வரமருளிக் காப்பாயே
ஓடிடும் மனந்தனை ஓங்காரத்தி லிருந்திடே
பாடிடும் எந்தனை பார்த்திடக் கூடாதோ
கூடிடும் என்னையே கூற்றுவன் வாரானே

தருமிக் குதவிட தரணிக்கு வந்தவனே
வருமிக் குழவிக்கு வரந்தர தாமதமேன்
உருமிக் கொண்டுரு உறவினர் மனமகிழ
இருமிக் கபெருநிதி இக்கணமே தருவாயே

சிவனே எந்தன் சிந்தை இருப்பவனே
உவமே யமில்லா உண்மை பொருளே
அவனே நல்லான் அன்பர் போற்றவே
இவனை சீராக்கி இணையடி சூட்டுவாயே

சோதிக்காதே சோமசுந்தரா சோர்வுற்ற என்னையே
பாதிக்காதே பக்குவமாய் பாவவினை நீக்குவாயே
பேதிக்காதே மனந்தந்து பேர்பெறச் செய்வாயே
சாதிக்காத தொன்றுண்டோ சன்மார்க்கம் உணர்ந்தாலே

காலம் போகிறதே கடன் தீராயோ
ஆலம் உண்டவா அன்பு காட்டே
சீலம் கொண்டவா சிவனே காப்பாற்று
ஞாலம் போற்றவே ஞானம் தருவாயே

இன்றே அருளிடு இக்கணமே காத்திடு
மன்றே நடம்புரி மகேசனே வந்திடு
ஒன்றே உண்மை ஒளியாய் ஆக்கிடு
நன்றே செய்திட நல்லருள் தந்திடு

இராமேஸ்வரா தெய்வமே இகபரசுகம் தருவாயே
இராமபிரான் வணங்கிய இன்புருவே அருளுகவே
இராமலிங்கா சற்குருவே இருவினை நீக்குகவே
இராமசாமி தேசிகரே இராகதுவேச மாற்றுவாயே

பர்வதவர்த்தினி தாயே பழவினை போக்குவாயே
சர்வசுதந்திர ணாகிட சகலமும் அருள்வாயே
நிர்விகல்பமும் சமாதி நிர்மல மனமுந்தா
சர்வமும்நீயே தயாபரி சடுதியில் வருவாயே

தீர்த்தாண்ட கரையிலே தீர்த்தமாடி மகிழ்ந்தேனே
ஆர்த்தாண்ட அயோத்தியா ஆடினேன் நவபாஷாணமே
ஊர்த்தாண்டவா அக்னிஸ்நான ஊடுபோய் வந்தேனே
சேர்த்தாண்டு கொள்வாயே சேதுஸ்நான முற்றேனே

தீர்த்தம் பலவாடியே தீந்தமிழ் கவிபாடியே
பார்த்து மகிழ்ந்தேனே பர்வதவர்த்தினி சமேதராகவே
தீர்த்து வைப்பாயே தீவினைகள் யாவையுமே
பார்த்து அருள்வாயே பார்புகழ வாழவையே

சத்தும் சித்தும் தந்து காத்து
பத்தும் பெத்து தத்தும் மாத்தி
நத்தும் வாழ்த்து பார்த்து அளித்து
கத்தும் எந்தனை காத்து மாத்துமே

எங்கெங்கோ சுற்றினேனே ஏதேதோ கற்றேனே
அங்கங்கே பற்றினேனே அனுபவங்கள் பெற்றேனே
தங்கமங்கை வந்தாளே தவமகனை தந்தாளே
அங்கமெங்கும் ஒளியூட்ட அருட்குரு வந்தாரே

நாயேனை பொருட்டாக்கி நன்னெறி தந்தவா
தாயேனை கருணையால் கனிவித்த சிவமே
மாயேனை நீக்குவிப்பாய் மலரடி சேர்ப்பாயே
சேயேனை இரட்சிப்பாய் சிவமாக்கி வைப்பாயே

முத்துக்குட்டி என்றொரு மோனமுனி சுவாமி தோப்பிலே
கத்துக்குட்டி நானொரு காலத்திலே காண போனேனே
தத்தும்குட்டி மகனோடு தாரமோடும் கண்டு மகிழ்ந்தேன்
பத்துகூட்டி பெற்றெடுத்து பதினாறும் பெறவாழ்த்தே

அழுதுஅழுது கண்ணீர் அற்றுப் போனதே
தொழுதுதொழுது கைகள் துவண்டு போனதே
விழுதுவிழுது எனப்பிறவி வராது காப்பாயே
பழுதுபழுது எனப்பிறர் பழிக்க வைக்காதே

படித்துவிட்டோம் என்கின்றனர் பல்கலைக்கழக பட்டம்வாங்கி
முடித்துவிட்டனர் கல்விகற்பதை எவர்தான் முற்றும் அறிந்தவர்

நடித்துவிடுவர் எல்லாமறிந்த மேதாவி நான்தான்என்று
முடித்துவிடுவர் மக்களுங்கள் ஆணவத்தை அறிவிலிகளே

கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு
பற்றது பற்றற்றான் மேலாகில் நமக்கும்
உற்றது வீடுபேறு உவப்புடன் சொல்வேன்
மற்றது எதுவும் வேண்டாம் மாநிலத்தே

என்னுடன் வந்தாள் தங்கம் மனையாளாக
என்னுடன் வந்தனர் பற்பலரும் சத்சங்கமாக
என்னுடன் என்றும் இருப்பவன் நீஒருவனன்றோ
என்னுடன் நீஇருக்கும் பாங்கினை அறிவிப்பாயா

இருக்கவீடு தந்தைதாய் தந்துஅகமிக மகிழ்ந்ததுண்டு
உருமிளிரஉடை உற்றஉறவினர் உளமுடன் தந்ததுண்டு
கருஉருவாக களிப்புடன் மனையாளை கண்டுதந்தாய்
திருஉருவே உவப்புடன் உன்னடிபெற உறுதிஅருள்

தாய்என்று வந்தாள் அன்பின்உறைவிடம் அன்னை பகவதி

சேய்என்று வந்தேன் தாயேஉந்தன் கருவரையில்
நோய்போல் என்மனம் பற்றியசலனமதை நீக்கிய தெய்வமே
தாய்சேய் எனஇனிநம் பிறவிவருமானால் இருக்க அருளே

மனம்போன போக்கெல்லாம் போகவிட்டு உலகிலெனக்கு
தினம்ஒரு பாடம்புகட்டிய திருஉருவே திவ்யஜோதியே
இனம்உனக்கு எங்கள்மீது இரக்கந்தான் வரவிலையோ
தனம்பலவும் தந்தெமை தாழ்வில்லாது காப்பாயே

கண்மணிமாலை எழுதச்செய்து எம்மையும் ஆட்கொண்டாய்
கண்மணிதனை கருதச்செய்து காப்பாற்ற அருள்செய்வாய்
மண்மிசையினி மாந்தரெலாம் கலந்துறவாட கருணைசெய்
மண்மிசையுன் மகிமைமலர செய்வித்தெமை காத்துஅருள்

நான்படும் பாடெல்லாம் நாயகா நீஅறிவாயே
பின்ஏன் என்னையின்னும் பேதலிக்க விடுகிறாய்
உன்மனம் என்னகல்லோ இரும்போ கற்பூரமோ
என்மனம் குளிரஎனையும் ஆதரிப்பாய் அற்புதமே

முக்கடலும் சங்கமிக்கும் முத்தமிழும் மணக்கும் குமரியே

முக்கடல் நீர்அருந்துவமே மும்மூர்த்தியும் ஒன்றாகியதலமே
முக்கடலெ ன்னமும்மலத்துள் மூழ்கிடாது எமைகாப்பாயே
முக்கடல் தீரத்திலே நின்றருளும் அன்னை பகவதியே

சூரியசந்திர தோற்றம்ஒரு சித்ராபௌர்ணமி தினத்திலே
சூரியசந்திர தோற்றம்ஒரு சேரகாணலாம் குமரியிலே

சூரியசந்திர தோற்றம்சூடு கொண்டதிருவாவடு துறையிலே
சூரியசந்திர தோற்றம்இரு கண்எனகண்டதே கண்மணிமாலை

கண்மணிமாலை தொடுக்க கருத்தில் வந்தமர்ந்தாயே
கண்மணிமாலை காலத்தை வென்றிட அருள்புரிவாயே
அருட்பெருஞ்ஜோதி அந்தாதி அடுத்துவர அகமிருந்தாயே
அருட்பெருஞ்ஜோதி அந்தாதி அவனியிலே ஒலிக்கச்செய்யே

நாகர்கோவில் நடுவெழுந்த நாகரம்மன் தாயே
பாகர்யுமை மேலணிந்த பைந்நாகமே காவே
நாகர்நீயே நாகாசனன் மேலெழுவார் மஞ்சமே
நாகர்நீயே நன்மைகள் தந்தெமக்கு அருளே

பாடிக் கொடுத்தாய் பக்தர்கள் பலருக்கு
சூடிக் கொடுத்தாள் சுந்தரி ஒருவள்
ஆடிக் காண்பித்தாய் அன்பர்கள் களிப்பதற்கே
நாடி உன்னைசரண் அடைந்தேன் அருளுகவே

ஏகாந்தமாய் நானிருக்க இடமொன்று சொல்
நாதாந்தமாய் நீயிருக்கு மிடமெங்கே சொல்
சதானந்தத்திலே திளைக்க அருள்புரி கண்ணா
நித்தியானந்தம் நிலைக்க நிமலநீ அருளே

இருமனம் கொண்டு திரிந்த என்தன்னை
ஒருமனம் கொண்டு உருவாய் உன்தன்னை
திருமணம் கொண்டு மேன்மையுற எண்ணிய வேளை
திருமணம் எனக்கு புவியிலே தந்ததேனோ

கைபற்றினேன் கண்களால் கருணைகடலே உன்னை
காப்பாற்றினாய் கண்டபடி திரியாமல் என்னை
கைப்பற்றச் செய்தாய் கண்கவர் மனையாளை
காப்பாற்று காலமெலாம் களிப்புறவே எங்களை

எத்தனையோ நூல்கள் இருக்கின்ற பிரபஞ்சத்தில்
அத்தனையும் படித்து உணரகாலம் ஏதுஎன
என்தனையும் கண்மணி மாலைஎழுத வைத்தாயோ
உன்தனையும் உணர வைத்தாயோ ஜோதியே

மூவாறு ஆண்டுகள் கல்விகற்க செய்தாய்நீ
ஓராறு ஆண்டதில் கண்கண்ட தெய்வத்தோடு
ஓராறுடன் இரண்டாம்பின் கண்டத்தில் உலகக்கல்வி
ஈராறு ஆண்டுபின்னர் கற்பித்தது தான்கல்வி

நாஞ்சில் நாட்டில் நன்மக்கள் பலருண்டு
நாஞ்சில் நகர்தனில் நானிலத்தோர் போற்றும்
நஞ்சில்லா நெஞ்சமுடன் வாழ்ந்த சித்தர்களுண்டு
நஞ்சில்லா நெஞ்சமுடன் வாழும் உன்மத்தருண்டு

பாடுவது பாட்டுஎழு துவதென்ன என்றென்னை
ஆடுவதும் ஓடுவதுமாய் அவன்தான் ஆட்டுவிக்கிறான்
நாடுவது அவன்பாதா ரவிந்தமே என்றுமெனை
ஊடுதல் தவிர்த்து ஒளியருள் அருட்பெருஞ்ஜோதி

சவேரியாரே எமக்கு சன்மார்க்கம் அருள்கவே
சவேரியாரே நல்ல சகவாசம் தருவாயே
சவேரியாரே ஏசுநாதா சங்கீதம் உரைப்பாயே
சவேரியாரே செல்வம் சகலமும் தந்தருளே

கண்மணி மாலைஎழுதி வெளியிட செய்தாய்
கல்யாணம் பண்ணிவைத்து களிப்புற செய்தாய்
கற்றவரோடும் நல்லவரோடும் சங்கம் அமைத்தாய்
கடைசிவரை கலங்காமல் காத்துகருணை செய்வாய்

செத்தாரை போல திரிந்த திகம்பரா
எத்தாலும் உனை மறவா நிலைபெற
பித்தனாய் பேயனாய் உலகில் திரியுமெனை
அத்தனாய் ஆதரித்து அருள் ஆண்டியே

பன்னிரு சிவத்தலம் கண்டுய்ய வாரீர்வாரீர்
பன்னிரு கரத்தவரை கண்களால் உருவாக்கியவர்
பன்னிரு திருமுறை போற்றும் பாவநாசர்
பன்னிரு ஆண்டுகள் பற்றினால் பாக்கியவானாம்

சுடச்சுட தங்கம் ஒளிருமாம் துன்பம்
படப்பட நானும் களிக்கிறேன் ஒளியாலே
தொடத்தொட உள்ளத்தில் ஆனந்தம் வருநாளில்
மடமட எனசாயும் என்பாவ மெல்லாம்

ஆதிமுத்தா னந்தம் அகல்கை யூற்றிலேயமர
ஆதிமுதலா னவனை அகங்குளிர கண்டுணர
ஆதிமுதல் குருவை அகத்தியனை தரிசித்திட
ஆதியிலே அமைந்த ஆரல்வாய் மொழிவாரீர்

பதினெட்டடி அனுமனே பதமலர் தொழுதேனே
பதிஎட்டும்படி எமக்கே பக்குவம் தந்தருளே
பதினெட்டாம் படிவாசனும் பதினெட்டு புராணமும்
பதினெண் சித்தர்களும் பரிசெனக்கு அருளணுமே

பொருளறியா பேதையேன் பொன் வேண்டியே
பொருள்பெறவே வணங்கினேன் பொதுவில் ஆடுவோனே
பொருளறிவித்து புனிதனாக்கி பொதுநலம் காத்திடவே
பொருந்தி இருப்பாயே பொன்னுடல் தருவாயே

பீர்முகமதே எந்தன் பீடைகளை ஒழித்தருளே
ஊர்முகமதே மெய்ப்பொருள் ஊர்த்துவ ரேதசருளே
பார்முகமதை எந்நாளும் பாவியேனை காத்தருளே
நூர்முகமதை பற்றியே நூழை புகவருளே

தக்கலை ஞானியின் தண்ணருள் கிட்டுமோ
எக்கலை யும்வாசமே எம்பெருமாள் அருளினாலே
ஆக்கலை நானுணர அல்லாவே அருளுகவே
வக்கிலை வருத்தம் வறுமை போக்கியருளே

முகம்மது வாய்திகழ முன்னிற்கு சோதியே
முகத்துக் குமுகமாய் முக்கோண கோட்டையே
முகத்துக் கண்ணை முறுக்கி நோக்கியே
முகமது உன்னை முன்னாலே காணலாமே

புனித சவேரியாரே புண்ணியம் அருள்கவே
மனித உருவிலே மகத்துவம் புரிந்தவரே
புனிதர் இயேசுவின் புகழ்தனை போதித்தவரே
இனிதா னவாழ்வினை இன்முகத்தை தந்தருளே

ஆதிகுரு ஜோதியே ஆட்கொண்ட இராமசாமியே
நீதிவழு வாதெனை நீடித்திருக்க செய்வாயே
பாதிஇர வினிலே பரிந்தருள் புரிந்திடுவாயே
வாதிநான் வாழ்ந்திட வரந்தந்து காப்பாயே

என்னை மாற்றிய எங்குரு இராமசாமியே
உன்னை பணிந்தே உண்மை உணர்ந்தேனே
அன்னை அப்பன் அருட்குரு நீயல்லவா
முன்னை வினையை முற்றுப்பெற வைப்பாயே

ஜோதியை கண்டே சுயம்ஜோதி பெற்றேனே
ஜோதிராம சாமியை சேர்ந்தே உய்தேனே
ஜோதியான வள்ளலிடம் சரணாக வைத்தாரே
ஜோதியானு மாகவே ஜோதியே அருள்வாயே

தாய்க்கு நிகராமோ தவறினும் காப்பாளே
வாய்க்கு மோபரகதி வந்தனை புரிந்தேனே
சேய்க்கு உதவிடுக சேர்ப்பாய் திருவடியே
காய்க்கு மரமாகி கருணையுடன் வாழவே

துயரால் வாடுமெனை தூக்கிவிட லாகாதா
கயரால் மாயையை களைந்திட வையாயோ
பெயரால் வாழ்ந்திட பெருமை தாராயோ
வயரால் இடருறுமோ வாக்கினில் இருப்பாயோ

கருணை வந்து கடலருகே நின்றதே
அருண னாயிரம் அன்புமழை பொழியுதே
தருண மிதுவே தக்கபடி அருள்வாயே
வருண னெனவே வாழவை பகவதியே

ஜெகத்தை காக்கும் ஜெகதம்பா பராபரையே
மகத்தை உணர்ந்து மகாத்மா ஆகிடவே
இகத்தே இணையடி இன்பம் உரைக்கவே
அகத்தே இருந்திடு அம்மையே பாலாவே

ஆதியே ஜோதியே ஆட்கொள் எம்மையே
நீதியே வழுவாது நீடுவாழ அருள்கவே
ஓதியே அழுதேன் ஓடிவந்து காப்பாயே
சோதியே லடியேன் சோகத்தை நீக்குவாயே

எதிரியே இல்லாது எங்களை வாழவை
சதியிலே சிக்காது சன்மார்க்க மாகவே
பதியிலே நிற்கிறேன் பார்வதியே காத்திடு
மதியிலே உறைவாயே மகாமாயே சக்தியே

எல்லாம்வல்ல வயலூர் எம்பெருமான் கருணையாலே
பல்லாண்டுகள் பக்தியை பாரெங்கும் ஊட்டியவரே
வல்லமையுனை போல்யார் வையத்தில் பெற்றிடுவார்
அல்லலுறும் அன்பருக்கு அபயக்கரம் தந்திடுவார்

திருப்புகழை பாடிப்பாடி திக்கெலாம் பணிசெய்தாயே
அருட்பாதந்த வள்ளலார் அறிவுரைப் படிநடந்தாயே
கிருபானந்த வாரிஎனும் கீர்த்திமிகு மாமணியே
உருவானவர் பற்பலரே உந்தனருள் உரைகேட்டே

விண்ணுலகில் காலட்சேபம் விரைந்துசென்று நிகழ்த்தியிட
மண்ணுலகு வாராதுநீ மறைந்தாயோ மன்னவா
பண்ணுலகில் எல்லோரும் பாராட்டும் பாவேந்தே
கண்ணுலகில் இறைவனின் கருணையே என்றவரே

மருங்கூர் முருகா மனங்கவர் அழகா
கருங்கல் கடம்பா கார்த்திகேயா கந்தா
அருங்கண் புதல்வா அம்பிகை பாலா
வருங்கால வாழ்வை வளமுடன் தாதா

ஆராட்டு நாளிலே ஆராதிக்கும் அன்பருக்கே
பாராட்டு பெற்றிட பாருலகில் அருள்வாயே
சீராட்டு எங்களை சீர்தந்த கண்மணியே
நீராட்டு கண்களில் நீர்வழியவே நிர்மலனே

கன்னியர் இருவர் அருகிருக்க கவினுற காட்சி தருவோனே
அன்னியர் எனஎனை தள்ளிடாதே அன்பர் கண்ணாக இருப்போனே
உன்னினைவு தப்பாது எப்போதும் உன்னடி காணவே அருள்வாயே
தன்னிறைவு நான்காண சகலமும் தந்தெனை சாதுவாய் வாழவையே

இராமசாமி ஐயாவே போற்றினேன் உன்நாமமே
இராமலிங்கம் அடியவரே சாற்றினேன் பாமாலையே
இராப்பொழுது இல்லாது இரவியாகவே இருந்திடவே
இராகதுவேசம் நீக்கியே இரமித்துக்கொண் டிருப்பாயே

நாடும்ஏடும் புகழும் நாராயண குருதேவா
நாடும்மனம் அமைதியுற நல்லருள் புரிபவனே
பாடும்பணி நல்கிஎமை பரமபதம் சேர்ப்பாயே
கூடும்படி அருள்வாய் கூவியுனை அழைத்தேனே

தாயே தந்தையே தன்மானம் தந்தாயே
ஆயாசம் கொள்ளாது ஆதரித்தெமை காத்தவளே
ஓயாது எம்நலன் ஓம்பிய உத்தமியே
மாயாது உனதன்பு மாநிலம் உள்ளளவே

நான்செய் புண்ணியம் நற்றாய் உனைபெற்றதே
தான்செய் பணியெலாம் தனக்கன்றி எமக்காக்கியவர்
ஊன்செய் வினையாவும் உனைவணங்கி மாற்றினேனே
வான்செய் அருளால் வந்தெமை ஆதரித்தாயே

அன்புக்கு இலக்கணம் அன்னையை விடவேறுண்டோ
தன்புகழ் தன்மகிமை தாயின்றி கிட்டிடுமோ
மன்புக்கு தொண்டாவதே மாதாவுக்கு மகிழ்ச்சியாமே
உன்புகழ் பெருக்குவதே உன்மகன் என்கடமை

தாயிற் சிறந்த கோயிலுமில்லை தக்கோர் உரைத்த தன்மையிதே
பாயிற் கிடந்து பரிதவிக்கையிலே பரிந்து நல்லமுது தந்தவளே
காயிற் என்னை கருத்துடனே கண்காணித்து வல்லவன் ஆக்கியவளே
போயிற் என்னுயிர் மீண்டுமுனது பண்பான பிள்ளையாய் வருவேனே

காசியிலே அருள்பாலிக்கும் அன்னபூரணியே ஆதிசிவனே
நாசியிலே ஓடும்காற்றும் நயனமிரண்டில் காண்ஒளியும்
மாசியிலே ஓர்இரவினிலே மகிழ்ந்துதான் இருக்கையிலே
வாசியினை நிறுத்திஒளி வழிகாட்டிய பரம்பொருளே

உலகுக்கு படியளக்கும் உமைநாயகா சிவமே
அலகுக்கு அடங்காமல் அடியருக்கு வருவோனே
பலகற்று அறியாமல் பரிதவிக்கும் பக்தருக்கே
உலகுக்கு உதவிசெய்து உத்தமனாய் வாழவையே

தறிகெட்டு ஓடுதே மனம் தாழ்வெனக்கு வந்ததே நிதம்
உறிபோட்டு தொங்குதே சித்தம் ஊழ்வினைகள் துரத்துதே சதம்
கறிபோட்டு பெருகுதே புத்தி வாழ்வில்தான் சோதனையே நாளும்
அறிவுகெட்டு அலையுதே அகங்காரம் ஆழ்நரகில் வீழ்வேனோ சொல்

இரண்டாம் திருவிழா இருவீடு வாகனமேறி
திரண்ட மக்கள் தக்கதுணை யுடன்வர
வரண்ட நாவுக்கு வந்தது அமுதமென
வரம்தர சுந்தர அழகம்மை வருவாளாம்

மூன்றாம் திருவிழா முக்திதர வருநாளாம்
மூன்றாள் தொடர மூலவர் பவனியே
சான்றோர் ஆகிட சகல செல்வமும்
ஈன்றாள் அழகம்மை ஈதிடுவாள் நமக்கே

நான்காம் திருவிழா நன்மை கிட்டிடுமாம்
நான்மறை வித்தகர் நாமாக அருள்வாராம்
நந்தியின் மேலாக நாயகியுடன் பவனியாம்
நந்தியின் மேலேறி நல்லம்மையும் வருவாளே

ஐந்தாம் திருவிழா ஐயம் தீர்ந்திடுமே
ஐந்து மூர்த்தியும் ஐசுவரிய காமதேனுவும்
ஐந்து வீதிதாண்டி ஐயருடன் ஊர்வலமாம்
ஐந்தும் ஒன்றாகிய ஐயாயுனை காணயருளே

ஆறாம் திருவிழா அற்புத அழகாம்
ஏறாத நிலையருள ஏகம்ப மூர்த்தி
மாறாத இளமையோடு மாதா அழகம்மையோடு
சீராக செல்வரோடு சிரித்து வருவாராம்

ஏழாம் திருவிழா ஏகாந்தம் தந்திடுமே
ஆளாம் திருவடிக்கே ஆகிடவே கைலாசவாசனை
மாளா புகழ்பெற்ற மண்டோதரி கணவன்தாங்க
தாளா மாலைமலை தாங்கியே வலம்வருவார்

எட்டாம் திருவிழா எட்டும் இரண்டும்
எட்டும் நமக்கே எல்லையிலா நடராசர்
விட்டால் ஓடுவார் விடுவிடு வெனயாடியே
நட்டாக வேண்டும் நற்பயிராம் ஞானத்தை

ஒன்பதாம் திருவிழா ஒருமை வருநாளாம்
இன்பதாமே இனிதாக இருதேர் ஓட்டமாம்
துன்பம் இனியிலை துயரம் இனியேது
அன்பன் நானே அழகம்மை அருள்வாளே

பத்தாம் திருவிழா பணிவு கிட்டுமே
சத்தாம் ஆனந்தம் சித்தாகி பூரணமாம்
சப்தா வர்ணம் சாவை போக்கிடுமே
இத்தார ணியிலே இடைச்சி விழாவாம்

பாருக்குள்ளே நல்லநாடு நம்
பாரதநாடு நீர்அதை உணர்வீர்
பாருமிதற்குள் பண்புரைக்கும் தமிழ்நாடு
பாதமலர் அறிந்தோர் இருக்குமிடம்
பார்உலகை உன்னுள்ளே காணலாம்
பார்த்திருந்து பக்குவமாய் பசித்திரு
பார்வதியும் பரமசிவமே சோதியாம்
பார்அண்டம் முக்கோள முகமாம்

இறையே எம்மை காக்கும் துரையே
இகபர சுகம் யாவும் தருவாயே
மறையே போற்றும் மவுன மணியே
மனம் கலங்காது இருந்திட அருள்வாயே
அறையே உன்பிள்ளை நானென உவந்தே
அகிலம் காக்கும் சக்தியும் அளிப்பாயே
மறையே என்றிட பாவம் அகன்றிட
மகத்துவம் தந்து எம்மை காப்பாயே

வேளிமலை குமாரா வேதனைகள் தீர்ப்பாயே
வேண்டும் வரங்கள் தந்து காப்பாயே
தாளிணையே பற்றினேன் தடுத்தாட் கொண்டிடு
தாகம் தீர்க்க அமுதம் தருவாயே
பாழினிலே மனம் செல்லாது தடுப்பாயே
பாவியேனை மன்னித்து வினைதனை நீக்குவாயே
ஊழினயே போக்குவாயே உன்பாதம் காட்டுவாயே
ஊமையாகி வாழ்வேனே உத்தமம் ஆக்குவாயே

வேளிமலை வேந்தனே வேழமுகத்தோன் தம்பியே
வேடுவக் குலமங்கை வள்ளியை மணந்தவனே
ஆழிசூழ் உலகினையே அருள்மயம் ஆக்குவாயே
ஆழிதுயில் கண்ணன் மருகனே முருகனே
வாழிநீடுழி எனவாழ்த்தே வந்தனை புரிந்தேனே
வாதபித்த சிலேத்துமம் வகையாக நிற்கவே
காளிமைந்தா கந்தா கண்கவர் அழகனே
காட்டு திருமுகத்தை கண்களிக்க பார்க்கிறேனே

வடிவை நகரினில் வந்தாளும் முத்தாரம்மா உன்
வடிவை நான்காண வந்தாளுமே எனையம்மா
மடிமீது இருத்தியே மகன்எனை காக்கணுமே
மடிமீது தலைவைத்து மகன்நான் தூங்கணுமே முன்

படிவை நீக்கியே பாவிஎனை காத்தருளே
படிவை த்துதான் பவுன்எனக்கு தருவாயே
முடிமீது சூடிடுவாய் முத்தாரம்மா பாமாலை திரு
வடிமீது சேர்த்திடு வடிவை மகன்எனை

இராமநாத சுவாமியே இராமன் போற்றும்
இமயபர்வத வாசியே இணையிலா தெய்வமே
இராப்பகல் அற்ற இடந்தனிலே எந்நாளும்
இன்புற்றிருக்க அருளுகவே இருவினை நீக்கியே
இராவணன் வணங்கும் இசைக்கு மகிழ்ந்தவனே
இறவாவரம் தந்தெமை இருக்கச் செய்வாயே
இராமலிங்க ஜோதியே இருகண் நின்றொளிரும்
இறையே எந்நாளும் இருப்பாய் எம்முடனே

வரவர உற்சாகம் குறையுதே
வந்தெமை காப்பாய் கண்ணா
நறநற எனபற்களை கடித்தே
நாறுமுடலை பழித்தனர் பலரே
அறஅற என்பாவம் வாழ்வேனே
அனுதினமும் உனைஎண்ணி இருந்தாலே
தரதர உன்அருளை வீழ்வேனோ
தத்துவம் உணர்ந்தே இருப்பேனே

கண்ணாடி பார்த்து வழிபடும் கண்ணான
கண்ணு மக்களை காக்கணும் ஐயாவே
உண்ணாடி ஒளிபெற விளங்க வைக்கணும்
உயரிய ஞான சித்தனே ஐயாவே
பண்பாடி வந்தேனே நானும் உந்தன்
பக்கமே காத்து அருள் ஐயாவே
திண்டாடி போகாமல் தெய்வமே எங்களை
தினமும் பார்ப்பாய் முத்து ஐயாவே

வித்தியாசமாய் இருந்தீரே திருப்பதி சாரத்திலே
வினைநீக்கும் பெருமாளே திருவாழி மார்பா
சத்தியசமரச சன்மார்க்க சங்கம் தழைத்திட
சாதுக்கள் சங்கம் கூடிட அருளே
பத்தியம்நான் இருப்பேன் பங்கம் வராமல்
பார்த்தசாரதி நீஎன்னுடன் இருந்து காப்பாய்
மத்தியம்கோயில் கொண்ட மணாளா உன்னால்
மரணமிலா பெருவாழ்வு நான்பெற வேண்டுமே

## ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரர் துதி

**பல்லவி**

ஆடையின்றி திரிந்ததென்னே சதாசிவா மனித
வாடையின்றி போனதென்னே சொல்வாய் பிரமேந்திரா
சாடையாய்நீ உணர்த்தினாலும் போதுமே சதாசிவா
ஆடவாராய் என்னுள்ளே எந்நாளும் இருந்தே

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| அறுபத்திநான்கு | கலைகளும் | அறிந்தவனே | சதாசிவா |
| அறுத்திடுவாய் | வினைகளையே | அருள்வாய் | அனுபூதியே |
| மறுபடியும் | பிறவாதே | மரணம் | ஒட்டியவா |
| மறுமொழி | கூறாயோ | மைந்தன் | எந்தனுக்கே |

(ஆடை)

| | | | |
|---|---|---|---|
| உருவாய் | வருவாயே | உலகோர் | உணரவே |
| உறுதியை | தருவாயே | உன்மத்தம் | கொள்ளவே |
| திருஉரு | வானவனே | திருவடி | சேர்ப்பாயே |
| திருவருள் | புரிவாயே | சிதம்பர | ஜோதியே |

(ஆடை)

| | | | |
|---|---|---|---|
| வறுமையை | போக்கிவாய் | வன்பகை | மாற்றிடுவாய் |
| வரும்நாளில் | அடியேனை | வரந்தந்து | காப்பாயே |
| பொறுமையை | தருபவனே | பொன்மய | மேனியனே |
| பொறுப்பாய் | என்பிழையை | பொல்லாங்கை | நீக்கியே |

(ஆடை)

| | | | |
|---|---|---|---|
| நெருப்பாய் | இருப்பவனே | நெரூரில் | அமர்ந்தவனே |
| நெறியாய் | வாழ்ந்திடவே | நெஞ்சில் | இருப்பாயே |
| விருப்பாய் | வந்தேனே | விண்ணவர் | கோமானே |
| விருந்தாய் | அமைவாயே | விரைவாய் | வருவாயே |

(ஆடை)

## ஸ்ரீ ஆதிவ்யாதி ஹர ஸ்ரீ மந்தாஞ்சநேய ஸ்வாமி

**பல்லவி**

| | | | |
|---|---|---|---|
| அஞ்சனை | பெற்றாள் | ஆஞ்ச | நேயனை |
| அஞ்சினை | வென்றான் | அனுமனே | - நம் |
| நஞ்சனை | நீக்குவான் | வானர | ராஜன் |
| வஞ்சின | மாற்றுவான் | வாயு | மகனே |

(அஞ்சனை)

## சரணம்

அபயம் என்றால் அருளும் நாதன்
உபயம் ஒளிரும் உருத்திர மூர்த்தி
சமயம் பார்த்தே சங்கடம் தீர்ப்பான்
இமயம் எனவே இருப்பான் நாளுமே (அஞ்சனை)

ராமராம என்றால் ரணங்கள் மாறுமே
மராமரா என்றாலும் மனிதனாக மாறுவானே
தராதரம் பாராமலே தண்ணருள் புரிவான்
சராசரம் போற்றும் சிரஞ்சீவி இவனே (அஞ்சனை)

பக்தனை காக்கும் பரம் பொருளே
சக்தியினை தருவாய் சஞ்சீவி உடனே
சித்தனை சேரவே சினமய மருள்வாய்
சத்சித் ஆனந்தமே சரணம் உனக்கே (அஞ்சனை)

நங்க நல்லூர் நடுவில் அமர்ந்தவனே
எங்கள் குறைதீர் எங்குல தெய்வமே
தங்கச் செய்வாய் தகுதியும் அருளும்
மங்கல மருள்வாய் மக்களை காப்பவனே (அஞ்சனை)

ஆதிவ்யாதி ஹரஹ்ரீமந் ஆஞ்சநேய ஸ்வாமியே
ஆதித்தனை பழமென அருகினில் சென்றவனே
ஆதிமூலமே நீதானே அபயம் உன்னடியே
ஆதரிப்பாயே அருள்வாயே ஆஞ்சநேய பகவானே (அஞ்சனை)





கன்னியாகுமரி குருவும் நெய்வேலி சீடர்களும்



குருவின் குடும்பம்



குருவுடன் விஜயன்



குரு குடும்பத்துடன் சென்னை ஜோதி ஸ்ரீ கணேஷ்



குருவுடன் நெய்வேலி அன்பர்கள்



கன்னியாகுமரி குருவும் நெய்வேலி சீடர்களும்

நாஞ்சில் ஆப்செட், நாகர்கோவில்